உள்நாட்டலுவல்கள் சுற்றறிக்கை இல : 03/2015

எனது இல: HAF/1/02 –REP
உள்நாட்டலுவல்கள் அமைச்சு,
சுதந்திரச் சதுக்கம்,
கொழும்பு 07,
2015.05. 18

அமைச்சுக்களின் செயலாளர்கள்,
மாகாண சபைகளின் பிரதம செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள்,
அரசாங்கக் கூட்டுத் தாபனங்கள் மற்றும் நியதிச்சட்டச் சபைகளின் தலைவர்கள்,
மாவட்டச் செயலாளர்கள்/ அரசாங்க அதிபர்கள்,
பிரதேசச் செயலாளர்கள் அனைவருக்கும்,

## குடியரசு தினக் கொண்டாட்டம்

இலங்கை 1948 ஆம் ஆண்டு பெப்புரவரி மாதம் 04 ஆம் திகதியன்று ஆங்கிலேயர் ஆட்சியில் இருந்து விடுவிக்கப்பட்ட பொழுதும் கூட, அது மேலும் ஆங்கிலேய முடியின் ஆதிக்கத்தின் கீழேயே இருந்தது. இருந்தபொழுதும், 1972 ஆம் ஆண்டின் குடியரசு அரசியலமைப்புடன் இலங்கை மக்களுக்கு சுதந்திரம் மற்றும் பொறுப்புவாய்ந்த சுதந்திர அரசாக வந்துகொண்டிருக்கின்றது. அதன்காரணமாக, 2008.04.10 ஆம் திகதிய 08/0562/325/004 ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம், சகல அரசாங்க நிறுவனங்களும் ஒவ்வொரு ஆண்டும் மே மாதம் 22 ஆம் திகதியன்று "குடியரசு தினம்" கொண்டாடுவதற்கு நடவடிக்கை எடுப்பதுடன், 2015.05.14 ஆம் திகதிய 15/0581/607/017 ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம், பின்வருவனவற்றில் தங்களது கவனத்தினைச் செலுத்தி இவ்வருடத்திலும் மே மாதம் 22 ஆம் திகதியன்று தங்களுடைய அலுவலகத்தில்/ நிறுவனத்தில் "குடியரசு தினம்" கொண்டாடுவதற்கு நிகழ்ச்சித் திட்டமொன்றினைத் தயாரிப்பதற்கும் நிறைவேற்றுவதற்கும் தாங்கள் தயவுடன் கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

01. மு.ப. 8.30 மணிக்கு தேசியக் கொடியினை ஏற்றி விழாவினை ஆரம்பித்து வைத்தல்.

02. நிறுவனத் தலைவரால் அல்லது அவரின் பிரதிநிதி ஒருவரால் பின்வருவனவற்றில் கவனத்தினைச் செலுத்தி குடியரசு தினக் கொண்டாட்டத்தின் முக்கியத்துவம் குறித்து அண்ணளவாகப் 15 நிமிடங்கள் உரையாற்றுதல்.

- தேசிய அரசுப்பேரவையால் 1972 ஆம் ஆண்டின் குடியரசு அரசியலமைப்பு வரைபின் தயாரிப்பு.
- இந்த வேலையினை முன்னெடுத்துச் சென்ற தலைவர்களின் பங்களிப்பினைப் பாராட்டுதல்.
- 1972 ஆம் ஆண்டின் குடியரசு அரசியலமைப்புடன் ஆங்கிலேயல் ஆட்சியில் இருந்து முற்றாகச் சுதந்திரம் பெற்ற சுதந்திர நாடொன்றாக இலங்கையர்கள் வந்துகொண்டிருப்பது.
- மக்களின் பொருட்டு பொறுப்பு வாய்ந்த அரசொன்றாக இலங்கை வந்துகொண்டிருப்பது.
- எமது நாட்டிற்குப் பொருத்தமான நிர்வாக மற்றும் பொருளாதார மாற்றங்களுக்கான தத்துவங்களினைப் பெறுதல்

எஸ். டீ. ஏ. பீ. பொரலெஸ்ஸ
செயலாளர்,
உள்நாட்டலுவல்கள் அமைச்சு.